வீண் புரளிகள் – பொய்ப் பிரச்சாரங்கள் – கற்பனைக் குற்றச் சாட்டுகளைக் கூறிவரும் எதிர்க்கட்சிகளுக்கு பாடம் புகட்டிட

# திராவிட மாடல் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க திண்ணைப் பிரச்சாரம்!

## ஆ.இராசா எம்.பி. தலைமையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் – இரா.ராஜீவ்காந்தி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற கழக மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, ஏப். 3 -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி, துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணியளவில், உதகை, ஹெவேலோக் சாலையில் அமைந்துள்ள “ஒட்டல் மோனார்க் ”இல், கழக துணைப் பொதுச் செயலாளர், ஆ.இராசா எம்.பி., தலைமையிலும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையிலும் தி.மு.க மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டகள் கூட்டம் நடைபெற்றது.

மாணவர் அணியை மேம்படுத்துதல் குறித்து ஆலொசனைக் கூட்டம் நடைபெற்றது. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி ஒருங்கிணைப்பில் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ. இராமகிருஷ்ணன் பங்கேற்பில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**தாயுமானவருக்கு நன்றி!**

எதேச் சதிகார ஒன்றிய அரசின் ‘புதிய தேசியக் கல்விக் கொள்கையை’ நமது திராவிட மாடல் அரசு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், முறைப்படி நமக்கு வழங்கப்பட வேண்டிய ‘சமக்ர சிக்சா அபியான்’ திட்டத்திற்கான நிதியை வழங்க மறுத்ததோடு, ‘புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டால்தான், நிதியை ஒதுக்க முடியும்’ என்று ஆணவத்தோடும் நடந்துகொள்கிறது பாரபட்சம் மிக்க ஒன்றிய அரசு. இந்தியாவின் கல்வித் தலைநகராக விளங்கும் தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பைச் சீர்குலைக் கும் சதி நோக்கம் கொண்ட, ஒன்றிய அரசின் இந்தச் செயல்பாட்டை, மாணவர் அணி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேளை, தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி, தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக மாற்ற முயலும் ஒன்றிய அரசின் இந்த ஆணவப் போக்குக்குப் சரியான பதிலடி கொடுக்கும் வகையில், “இந்தியை ஏற்காவிட்டால் பணம் தர மாட்டோம் என்று மிரட்டுகிறார்கள். நிதி தரவில்லை என்பதற்காக இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறும் கொத்தடிமை அல்ல நாங்கள்.... இரண்டாயிரம் கோடி என்ன? பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம். இது பணப்பிரச்னை அல்ல; நம் இனப்பிரச்னை. நம் தமிழை, தமிழினத்தை, தமிழ்நாட்டு மாணவக் கண்மணிகளை, இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்னை...” என சுயமரியாதைக் குரலில் முழங்கியதோடு, ஒன்றிய அரசு ஒதுக்க மறுத்த ரூ.2,152 கோடியை, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே விடுவித்திருக்கிறார் தமிழ்நாட்டின் முதல மைச்சர். ‘தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்’ என்றார் பாரதிதாசன். அத்தாயின் தலைமகனாய் நின்று, இந்த நிலம் காக்கும் நமது தாயுமானவருக்கு உளமார நன்றி தெரிவித்துக் கொள்கிறது மாணவர் அணி!

**மாணவநேசருக்கு நன்றி!**

வானை அளந்து வளரும் தொழில்நுட்ப உலகில், தமிழ்நாட்டு மாணவர்களும் போட்டியிட்டு அறிவை விரிவு செய்ய... அகண்டமாக்க... உறுதுணையாய் அவர்களுக்கு கணினி அவசியம். ஆனால், கொரோனா பெருந்தொற்றைக் காரணமாகக் காட்டி, ‘மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை’ நிறுத்தியது அடிமை அ.தி.மு.க. அரசு. சமத்துவத்தை அடையும் மிகப்பெரிய அறிவாயுதம் கல்வி என்பதை எப்போதும் வலியுறுத்தும் திராவிட நாயகர், எதிர்காலத்தில் உயர் தொழில்நுட்ப உலகில் நமது இளைஞர்கள் அறிவாயுதம் ஏந்தி வெற்றிவலம் வருவதை உறுதிசெய்திடும் நோக்கில்... தி.மு.க. ஆட்சி அமைந்ததும்... ‘நிறுத்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கான லேப்டாப் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவோம்’ என மகிழ்ச்சியோடு அறிவித்தார். தற்போது அதை நிறைவேற்றும் வகையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு, அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் கைக்கணினி (taplet) அல்லது மடிக்கணினி (laptop) வழங்கப்படும் என அறிவித்ததோடு, அதற்காக ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்ட்திருக்கிறார். அடிமை எடப்பாடி அரசால் நிறுத்தப்பட்ட ‘மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை’ மீண்டும் கொண்டுவந்துள்ள கழகத் தலைவர் அவர்களுக்கு மாணவர் அணியின் நன்றிகள்!

**பெருநேசத் தலைவருக்கு நன்றி!**

காலைச் சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம், உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், திறன் மேம்பாட்டை வளர்க்கும் வகையில் ‘நான் முதல்வன்’ எனப் பல்வேறு திட்டங்களை மாணவர் சமூகத்துக்கு வழங்கியவர் நமது பெருநேசத் தலைவர். இப்போது, உயர்கல்வி படிக்கச் செல்லும் திருநர் சமூகத்தினருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் தரவிருப்பதாக நிதிநிலை அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறார். எல்லோரையும் உள்ளடக்கியதே நமது திராவிட மாடல் என்பதை, ஒவ்வொரு திட்டத்திலும் மெய்ப்பித்துவருகிற... தாயினும் சாலப் பரிந்து நிற்கிற... நம் தாயுமான தலைவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது மாணவர் அணி!

**வீரத் தலைவருக்கு நன்றி!**

மொழி, கல்வி எனத் தாக்குதல் நடத்திவிட்டு ‘தொகுதிச் சீரமைப்பு’ என்ற பெயரில் மாநில அரசின் அதிகாரத்தின் அடிமடியிலேயே கை வைக்க எத்தனித்திருக்கிறது வஞ்சக ஒன்றிய பா.ஜ.க அரசு. அதற்காக, இந்திய ஒன்றியத்தில் ஒலித்த முதல் குரல் நமது கழகத் தலைவருடையதுதான். மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய தமிழ்நாட்டுக்கு தண்டனை தரும் வகையிலும்... மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த தவறிய வட மாநிலங்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பதைப் போலவும்... முன்னெடுக்கப்படுகிற இந்தத் தொகுதி மறுசீரமைப்பு முடிவை, தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது. “இது வெறும் எண்ணிக்கையைப் பற்றியது மட்டும் அல்ல, அதிகாரம் மற்றும் எதிர்கால நலன்களை உள்ளடக்கியது” என மிகத் தெளிவாக விளக்கியிருக்கும் நமது முதலமைச்சர் அவர்கள், இதனால் ஆபத்துகளை எதிர்கொள்ளப்போகும் அனைத்து மாநிலத் தலைவர்களையும் அழைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தியிருக்கிறார்.

நமது இளைந்தலைவர் உதய் அண்ணாவும் “தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அனுமதித்தால், சொந்த நாட்டில் அரசியல் அதிகாரம் இழந்த குடிமக்களாக மாறும் அபாயம் ஏற்படும். எனவே, இந்த விவகாரத்தை சாதாரணமாக கடந்து போக முடியாது. இது பா.ஜ.க.வை நிராகரித்த மாநிலங்களின் பிரதிநிதித்துவ த்தைக் குறைக்கும் திட்டமிட்ட சதி முயற்சி. இது எண்கள் விளையாட்டு அல்ல, நமது கூட்டாட்சி அமைப்பிற்கே நேரடி அச்சுறுத்தல்” என தெளிவாக முழங்கினார். நமது தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கும் இந்த விழிப்புணர்வு, மற்ற மாநிலங்களுக்கும் பரவி, தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தேசிய அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பல்வேறு திட்டங்களில், மொத்த இந்தியாவுக்கே வழிகாட்டும் நமது திராவிட மாடல் நாயகர், அடுத்து நாம் எதிர்கொள்ளப்போகும் பேராபத்தை முறியடிக்கும் போர்க்களப் பாதையையும் வடிவமைத்துக் கொடுத்தமைக்காக, நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறது மாணவர் அணி!

**கருணைக் கரத்திற்கு நன்றி!**

சிலைகள் அமைக்கவும், புராணப் பாத்திரங்களுக்கு கோவில்கள் கட்டவும், மக்கள் வரிப்பணத்தை வாரி இறைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசிடம், நாளையத் தலைமுறையின் கல்விக் கண் திறக்க நிதி கேட்டால், வேப்பங்காயாய்க் கசக்கிறது; நிதியை குறைக்கிறது. இளைஞர்கள் அறிவு பெறுவதை நினைத்து அஞ்சுகிறது. அதனால்தான், இந்திய ஒன்றியம் முழுவதுக்குமே பள்ளிக் கல்விக்காக ரூ.78,572 கோடி மட்டுமே ஒதுக்கியது. ஆனால், நம் தாயுமானவர், திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியிருப்பது ரூ.46,767 கோடி. இப்படி, இம்மாநிலத்தின் கல்விக்காக, தான் செய்த தனது முந்தைய சாதனைகளைத் தானே முறியடித்திருக்கும், கல்விச் சுடரேற்றும் கருணைக் கரத்திற்கு... கழகத்தின் கம்பீரத்திற்கு... எங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது மாணவர் அணி!

**துணை முதல்வர் கரங்களுக்கு வலு சேர்ப்போம்!**

தமிழ்நாடு, தமிழ்நாட்டு மக்கள் நலன், திராவிடத் தலைவர்கள் வகுத்த சமூகநீதி, தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம் ஆகியவற்றைச் சிதைத்து, அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் கூட்டாட்சித் தத்துவத்தைச் சீர்குலைக்கும் வேலையை மீண்டும் தொடங்கியிருக்கிறது மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதனால்தான், அண்மையில் வெளியான ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ‘தமிழ்நாடு’ எனும் பெயரே இல்லாமல் பார்த்துக்கொண்டது தமிழ் விரோத ஒன்றிய அரசு. ஏற்கெனவெ மக்கள் தொகையைக் காரணம் காட்டி, நிதிப்பங்கீட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறார்கள். அடுத்து, அதே மக்கள்தொகையைக் காரணம் காட்டி, நாடாளுமன்றத்திலும் தமிழ்நாட்டின் பிரநிதித்துவத்தை குறைக்கப் பார்க்கிறார்கள். கூட்டாட்சிக்குக் கேடு விளைவிக்கும் எந்த முயற்சியாக இருந்தாலும், அதை புரிந்துகொள்ளும் அறிவையும், எதிர்த்து நிற்கும் ஆற்றலையும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நமக்கு வழங்கியிருக்கின்றனர். அந்தப் பேராயுதங்களை ஏந்தி, இந்தியத் துணைக்க ண்டத்துக்கே கூட்டாட்சி குறித்துப் பாடம் எடுத்துக்கொண்டிருக்கிறார் நமது தென்னாட்டு ஆசான்.

மாநில அதிகாரத்தைச் சீண்டிப்பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக, நம் கழகத் தலைவர் தொடங்கியிருக்கும் இந்த சுயமரியாதைப் போர், தற்போது இந்தியப் பெருங் கண்டம் முழுவதும் தீயாய்ப் பரவிப் பற்றிக்கொண்டிருக்கிறது. அதற்கு வலுசேர்க்கும் விதமாக, “தமிழ்நாடு அரசையும் தமிழ்நாட்டு மக்களையும் நீங்கள் ஒருபோதும் மிரட்டிப் பணியவைக்க முடியாது. எங்களுக்கு அரசியல் இரண்டாவதுதான். மொழியுணர்வும் இன உணர்வும்தான் முதன்மையானது” என முழங்கி வருகிறார் நம் இளந்தலைவர் உதய் அண்ணா. அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கும் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்கும் வகை யில், ஒன்றிய அரசுக்கு எதிராக... கழகத் தலைவரின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் உற்ற துணையாக தோள்கொடுத்து நிற்கும் எங்கள் கழக இளந்தலைவர் உதய் அண்ணாவின் கரங்களுக்கு, இளங்குருதிச் சேனையாய்... மாணவரணி வலுசேர்க்கும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறது!

**ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!**

ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., சிறுபான்மைச் சமூக மாணவர்களுக்கான உதவித்தொகையை நிறுத்தியிருக்கிறது பாராமுக ஒன்றிய அரசு. அதுமட்டுமல்ல, இளம் முனைவர் (M. Phil), முனைவர் (PhD) பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் சிறுபான்மைச் சமூக மாணவர்களுக்கு, மவுலானா ஆசாத் பெயரில் தேசிய அளவில் நீண்டகாலமாகச் செயல்படுத்தப் பட்ட உதவித்தொகைத் திட்டத்தை யும் நிறுத்தியிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. இதைப்போல, தொழில் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளுக்கு, தகுதி அடிப்படையில் உதவித்தொகை வழங்கும் திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிதி உதவியையும் இரக்கமற்று குறைத்திருக்கிறது. சாவித்ரிபாய் ஜோதிராவ் ஃபுலே பெல்லோஷிப் திட்டத்தில் மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை, தற்போது முழுமையாக வழங்கப்படுவது இல்லை. ஒடுக்கப்பட்ட பின்தங்கிய கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு இது போன்ற உதவித்தொகைகளை நிறுத்திவைக்காமல் இன்னும் அதிகப்படுத்தி வழங்க, ஒன்றிய அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறது மாணவர் அணி!

**பல்கலைக்கழக மானிய குழுவுக்குக் கண்டனம்!**

பல்கலைக்கழகங்களின் வேந்தர் எனும் பொறுப்பிலுள்ள ஆளுநர், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக்களிலும், ஆளுநர் மாளிகையிலும் பிற இடங்களிலும் நடைபெறும் நிகழ்வு களிலும்... தமிழ்நாட்டின் கல்வித் தரம் குறித்து மோசமாகப் பேசுவதும், முனைவர் பட்ட ஆய்வுகள், முதுநிலைப் பட்டங்கள் பற்றித் தகுதிக் குறைவாகக் குறிப்பிடுவதும்... தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான், ‘இந்தியா முழுவதும் துணைவேந்த ர்களை நியமிக்கும் அதிகாரம், அந்தந்த மாநில ஆளுநர்களுக்கே முழுமையாகக் கிடைக்கும்’ வகையிலான வரைவறிக்கையைக் கொண்டு வந்துள்ளது பல்கலைக்கழக மானியக் குழு.

தமிழ்நாட்டில் சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, வலுவான உயர் கல்விக் கட்டமைப்பையும், உயர்கல்வி கற்கச் செல்லும் மாணவர்களின் எதிர்காலத்தையும், இந்த வரைவு அறிக்கை... கடுமையாகப் பாதிக்கும் என்பதால், ‘திருத்தப்பட்ட நெறிமுறைகள் அடங்கிய இந்த வரைவை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்’ எனத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை, கழக மாணவர் அணி உளமார வரவேற்பதோடு... பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு கடுமையான கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கிறது!

**வேந்தராக முதல்வரை அறிவித்திடுக!**

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில், ஆளுநர் பதவி என்ற ‘தொங்குச் சதை’யை நிரந்தரமாக அகற்றி, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். கல்லூரிகள் அமைப்பதற்கான இடம் தருவது மாநில அரசு, பேராசிரியர்களுக்கு ஊதியம் தருவது மாநில அரசு. உதவித்தொகை - ஊக்கத்தொகை கல்விக் கட்டணச் சலுகை என மாணவர்களுக்கு அனைத்துச் செலவுகளையும் செய்வது மாநில அரசு. ஆனால், அவற்றை நிர்வகிப்பது மட்டும் எங்கிருந்தோ வந்த ஆளுநரா? தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கிவருகின்றன. அவர் வேலையை அவர் ஒழுங்காகச் செய்யாததால், இவற்றில் ஆறு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பணியிடம் காலியாக உள்ளன.

அது மட்டுமல்ல, பல்வேறு கல்வி நிறுவனங்களில் பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் உள்ளிட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 13 மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்க வேண்டிய ஆராய்ச்சி நிதியை வழங்காமல் காலம் தாழ்த்திவருகிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. தமிழ்நாடு, உயர்கல்வியில் முதலிடத்தில் இருப்பதைக் காணப் பொறுக்காத வயிற்றெரிச்சலில், நம்மைக் கீழே தள்ள, ஒன்றிய பா.ஜ.க அரசு ஏவிவிட்ட ஆளுநர், தன் வன்மத்தை நம்மீது கொட்டி, நம் மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார். எனவே ‘ஆளுநர்தான் பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருப்பார்’ என்பதை மாற்றி, ‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சித் தலைவரான முதலமைச்சரையே பல்கலைக்கழகங்களின் வேந்தராக நியமிக்க வேண்டும்’ என்ற தமிழ்நாடு அரசின் சட்ட முன்வடிவுக்கு, விரைவில் ஒப்புதல் தர வேண்டும்’ என முன்வைக்கிறது மாணவர் அணி.

**தர்மேந்திர பிரதான் - நிர்மலா சீதாராமனுக்கு கண்டனங்கள்!**

தமிழ்நாட்டின் கல்விக்குத் தர வேண்டிய நிதியைத் தராமல் வஞ்சித்ததோடு, “மும்மொழிக் கொள்கையை ஏற்காவிட்டால் நிதிதரமாட்டோம்” என ஆணவத்தோடு பேசினார் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான். அதைக் கண்டித்தால், “தமிழக அரசை, தமிழக எம்.பிக்களை, தமிழக மக்களை நாகரிகமற்றவர்கள்...” எனத் தடித்தனத்தோடு பேசினார். “தேசியக் கல்விக் கொள்கையை ஏற்பதாக இல்லை. மாணவர்களுக்கு நன்மை பயக்கும்போது மட்டுமே ஒன்றிய அரசின் திட்டங்களை ஏற்கிறோம். அதற்காக, அனைத்து திட்டங்களை யும் கண்மூடித்தனமாக ஏற்க முடியாது. ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளின்படி ஒன்றிய அரசின் திட்டத்தில் சேருவது குறித்து முடிவுசெய்வோம்” என்று நம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெளிவாகச் சொன்னபோதும், “பி.எம் ஸ்ரீ திட்டத்தை ஏற்பதாக தமிழ்நாடு அரசு ஒப்புக்கொண்டு, பிறகு யு டர்ன் அடித்துவிட்டது” எனத் தன் போக்கு ஆதாரமற்று பேசியதோடு, தன்னை வந்து சந்தித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் திமுக எம்.பிக்களும், “பி.எம் ஸ்ரீ திட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவோம் என்று உறுதியளித்தனர்” என வாய்கூசாமால் பச்சைப்பொய் பேசித் திரிகிறார். இப்படித் தன்போக்குக் குத் தடித்தனத்தோடு பேசித்திரியும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு, மாணவர் அணி கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

‘நாக்கு தடித்த பிரதானே பரவாயில்லை’ என நாம் எண்ணும் அளவுக்கு, நடந்துகொள்கிறார் அம்மையார் நிர்மலா சீதாராமன். தன்னைத் தமிழ்நாட்டுக்காரர் எனக் கூறிக் கொ ள்ளும் நிர்மலா சீதாராமன், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற சொல்லே இல்லாமல் பார்த்துக்கொண்டார். பா.ஜ.கவுக்கு ஒவ்வாத சமூக நீதி, தந்தை பெரியார், தமிழ், திராவிடம், சமத்துவம், சாதி ஒழிப்பு, மதச்சார்பின்மை போன்ற முற்போக்குக் கருத்துகளைப் பேசும் நம்மீது, அவருக்கு இருக்கும் வன்மம் நன்றாகப் புரிகிறது. ஆனால், ‘தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு, கடந்த பத்து ஆண்டுகள் பல்வேறு திட்டங்களைக் கொடுத்தது’ என அவர் இஷ்டத்துக்கு அள்ளிவிடுவதை ஏற்கமுடியாது. நம் உரிமைகளைக் கேட்டால், ஏதோ அவரது அப்பா வீட்டுச் சொத்தைக் கேட்பதைப்போல, “நாங்க இவ்ளோ பணம் கொடுக்கிறோம்; நீங்க என்ன கொடுக் கிறீங்க என்ற வாதமே தவறு” என எகத்தாலமிடுவதைச் சகித்துக்கொள்ள முடியாது. “இந்தியை ஏற்க மாட்டோம் என்றால்... தமிழ் படித்தால் பிச்சை கூட கிடைக்காது. தமிழ் படித்தது பிச்சை எடுப்பதைத் தவிர உயிர் வாழ ஒன்றுக்கும் பயன்படவில்லை” என்று ஆணவத்தோடு பேசுகிற... தமிழ்நாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளில் எப்போதும் ஈடுபடுகிற... தமிழ்விரோதி அம்மையார் நிர்மலா சீதாராமனுக்கு தன் கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்கிறது மாணவர் அணி!

**ஒன்றிய அரசுக்குக் கடுமையான கண்டனங்கள்!**

சென்னை பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் பெயரில் இருக்கை உருவாக்கப்பட்டது. ஆனால் அதற்கு போதுமான நிதியோ ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடத் தேவையான ஆசிரியர்களோ நியமிக்கப்பட வில்லை. தமிழ்... தமிழ்... என்று வாயில் வடை சுடும் பிரதமர், 2021ல் உத்தரப் பிரதேச மாநிலம் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில், மகாகவி பாரதியார் பெயரில் தமிழ் இருக்கை ஒன்று உருவாக்கப்படுவதாக அறிவித்தார். ஆனால், தற்போது வரை அதற்குப் போதுமான நிதியோ, பேராசிரியர்களோ நியமிக்கப்படாமல், அங்கு பெயரளவில் மட்டுமே அந்த இருக்கை உள்ளது. இந்தி மற்றும் சமஸ்கிருத ஆராய்ச்சிக்குத் தாராளமாகப் பணம் கொடுக்கும் ஓரவஞ்சனை ஒன்றிய அரசு, நம் தமிழ் மொழியை மாற்றாந்தாய் மனப்போக்கோடு அணுகும் நிலை கொஞ்சமும் மாறியதாகத் தெரியவில்லை. டெல்லி பல்கலைக்கழகம், ஜே.என்.யூ உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழி தொடர்பான ஆராய்ச்சி தடைப்படுவது, தொடர்கதையாக ஆகியுள்ளது. ‘தமிழ் மொழி தொடர்பான ஆராய்ச்சிக்குத் தேவையான நடவடிக்கையை, உடனே மேற்கொள்ள’ ஒன்றிய பா.ஜ.க அரசை, மாணவர் அணி வலியுறுத்துகிறது!

**‘இல்லந்தோறும் மாணவர் அணி’!**

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘இல்லந்தோறும் இளைஞரணி’ என இளந்தலைவர் வகுத்த மாடலைப் பின்பற்றி, மாணவர் அணிக்கும் இல்லந்தோறும் உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்க மாணவர் அணி திட்டமிட்டுள்ளது. கழகத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் மேற்பார்வையில், மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்று பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி நிர்வாகிகள் இந்தப் பணியை சிறப்பாக முன்னெடுக்கவுள்ளனர். கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள் முன்னிலையில், மாணவரணிப் பொறுப்பாளர்களைக் கொண்டு இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்படும். மாணவர் அணியில் உயர்நிலை தொடங்கி ஆராய்ச்சி வரை படிக்கும் மாணவர்களைச் சேர்க்க ஆவண செய்ய வேண்டும். துண்டறிக்கை, திண்ணைப் பிரசாரங்கள், கல்லூரி வளாகங்களில் முகாம்கள் அமைத்து, மாணவர்கள் நலனுக்காக தாயைப் போல் உழைக்கும் தாயுமானவர் கழகத் தலைவர், கழக அரசு ஆற்றி வரும் அரும்பணிகளை எடுத்துச்சொல்லி, புதிய உறுப்பினர்களை மாணவர் அணியில் இணைக்க வேண்டும். புதியவர்களை அணியில் இணைப்பதோடு, உறுப்பினர் அட்டையைப் புதுப்பிக்காதவர்களை புதுப்பிக் கச் செய்யவும் வேண்டும். இதை மக்கள் இயக்கமாக, மாணவர் புரட்சியாக முன்னெடுத்து, அடுத்த மூன்று மாதக் காலத்துக்குள் உறுப்பினர்களைச் சேர்த்து இப்பணியை முடித்ததன் அடையாளமாக, கழகத் தலைவர், இளந்தலைவர் கரங்களில் அப்பட்டியலைச் சேர்க்க வேண்டும். தொடர்ந்து, ‘இல்லம் தோறும் மாணவர் அணி’ இலக்கை எட்டும் வரை, மாணவர் அணி நிர்வாகி கள் இடைவிடாது உழைக்க வேண்டும்!

**திண்ணைப் பிரச்சாரத்தில் இறங்கும் மாணவர் அணி!**

தொகுதி தோறும் மாதம் ஒருமுறை மாணவர் அணி உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, அப்பகுதியில் இருக்கும் பிரச்சினை களைக் கேட்டறிவதோடு, அவற்றுக்குக் கழக அரசு கொண்டுவந்த திட்டங் களையும் கழக அரசு மேற் கொண்ட தீர்வுகளையும் திண்ணைப் பிரச்சாரமாக மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கான பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அவற்றைத் தீர்த்துவைக்கிற முயற்சிகளிலும் மாணவர் அணியினர் ஈடுபட்டு, கட்சி சாராத அல்லது மாற்றுக் கட்சியைச் சார்ந்த மாணவர்களையும் நமது கழகத்தை நோக்கி ஈர்த்திடும் வகையில் நமது பணி அமைந்திட வேண்டும். தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் னகலைஞர் உள்ளிட்ட நமது மறைந்ததலைவர்களையும், திராவிட இயக்கக் கருத்தியல் களையும் மாணவர்கள் மத்தியில் கொண்டுசேர்க்கிற முயற்சிகளில் ஈடுபட வேண்டும். தமிழ், தமிழர், தமிழ்நாடு குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் செய்த அளப்பெரிய பணிகளையும் இவற்றின்மூலம், அணியின் உறுப்பினர்கள் ஊக்கத்துடனும் தொடர்ந்து செயல்படவும் துணைநிற்க வேண்டும்!

**தேசியக் கல்விக் கொள்கைக்கு எதிராகக் கருத்தரங்குகள்!**

தமிழர்கள் தனித்துவமானவர்களாக இருப்பதும்... கல்வி வேலைவாய்ப்பு சமூகநீதி வாழ்க்கைத்தரம் என அனைத்து வகையிலும் உயர்ந்திருப்பதும்... மோடி அரசின் கண்களைக் கடுமையாக உறுத்துகிறது. அது, அரசியல்ரீதியாகப் பா.ஜ.கவை அண்டவிடாத தமிழ்நாட்டு மக்களின் மீது சதா வெறுப்பை உமிழ்கிறது. பிளவுவாதச் சக்திகளுக்கு எதிராக ஓரணியில் நிற்கும் தமிழ்நாட்டை, எல்லா வழிகளிலும் வீழ்த்திவிட முயல்கிறது. வீழ்த்த முயற்சிக்கும் போதெல்லாம் தமிழ்நாடு ஒன்றிணையும், எதிரி எந்த வடிவில் வந்தாலும் நெஞ்சு நிமிர்த்தி துணிந்து நிற்கும்.

ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதுதான் கல்வி. அதற்கு ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல... ‘மும்மொழிக் கொள் கையை ஏற்கும் வரை, தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது’ என்று மிரட்டல் செய்யும் தடித்தனத்தை, தமிழர்கள் பொறுக்க மாட்டார்கள். “நிதி உரிமையைக் கேட்டால், இந்தியை ஏற்க வேண்டும் என்று தமிழ்நாட்டை மிரட்டுகிறார்கள். தமிழ்நாட்டைச் சீண்டுவது, தீயைத் தீண்டுவதற்குச் சமம். சுதந்திரத்துக்குப் பிறகான தமிழ்நாட்டின் வரலாற்றைப் படித்தாலே அவர்களுக்கு இது புரியும். தலைக்கனம் காட்ட வேண்டாம்” எனப் புதிய கல்விக்கொள்கைக்கு எதிராக வேல் ஏந்தியிருக்கிறார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள். அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக மாவட்டந்தோறும் மாவட்டக் கழகத்துடன் ஒருங்கிணைந்து மாணவர்களைத் திரட்டி, தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராகக் கருத்தரங்குகளை நடத்த, மாணவர் அணி முடிவு செய்துள்ளது!

**கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சி!**

மேல்நிலைக் கல்வியை முடித்த மாணவர்களின், எதிர்காலக் கல்விக் கனவை நனவாக்கும் வகையில், உயர் கல்விக்கான வாய்ப்புகள், பட்டப் படிப்புகள், பட்டயப் படிப்புகள், கல்லூரிகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதையும்... கல்லூரிப் படிப்பை முடிக்கும் மாணவர்களுக்கு மேற்படிப்பை முடித்தவுடன் கிடைக்கும் வேலைவாய்ப்புகளையும்... வல்லுநர்கள், கல்வியாளர்களைக் கொண்டு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளை மண்டல அளவில் நடத்த, மாணவர் அணி திட்டமிட்டுள்ளது!

**‘இருநூறு தொகுதிகளில் வெற்றி’**

கழக அரசின் சாதனைத் திட்டங்களை வீடு வீடாக எடுத்துச்சென்று, அனைவருக்குமான வளர்ச்சி என்பதையும், அனைவருக்குமான அரசை நடந்து வருகிறது என்பதையும் எடுத்துச்சொல்லி... வீண்புரளிகள், பொய்ப் பிரசாரங்கள், கற்பனைக் குற்றச் சாட்டுகள் மூலம் அரசைக் குறைகூறிவரும் எதிர்க்கட்சிகளுக்குத் தக்க பாடம் புகட்ட... 2026 சட்டமன்றத் தேர்தலில், 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றிபெற வேண்டும் எனஇலக்குநிர்ணயித்துள்ளார் கழகத் தலைவர். ‘அந்த இலக்கை நிறைவேற்றி, தமிழகத்தின் தலைநிமிர்வாம், தமிழினத்தின் தலைவராம் நம் தலைவரை... இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆக்குவோம்...’ என்று சூளுரைத்துள்ளார் நமது இளந்தலைவர். ‘கழகத் தலைவரின் இலக்கையும், இளந்தலைவரின் சூளுரையையும் நிறைவேற்றியே தீருவோம்’ என்கிற உறுதியேற்று, களத்தில் பணியாற்ற படையாய் திரள்கிறது கழக மாணவர் அணி!

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.
என்கிறார் வள்ளுவர்.

உயிரைப் பறிக்கும் சாவு எதிர்கொண்டு வந்தாலும், அஞ்சாமல் ஒன்றுபட்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதற்கே, ‘படை’ என்ற பெயர் பொருந்தும் என்கிறார் கலைஞர்.

மாணவர் அணி, ‘படை’ என்ற பொருளுக்குப் பொருந்தும் விதமாக, தலைமையின் வழிகாட்டலில் அணி திரள்வோம்!

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 05.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி | காமாட்சி–மீனாட்சி திருமண மண்டபம், சிந்தாதிரிப்பேட்டை |
| 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 1 | ஆயிரம்விளக்கு | அண்ணா அறிவாலயம், தேனாம்பேட்டை |
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 1 | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 9 | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி